முழுப் பதிப்புரிமையுடையது

2016 க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்குத் தொடர்

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

முன்னோடி வினாத்தாள்

பத்திரம் I

கவனிக்குக :-

1) **அறிவுறுத்தல்களுக்கேற்ப வினாக்களுக்கு விடையளிக்குக.**
2) **இலக்கம் 01 தொடக்கம் 40 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
3) **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் வழங்கியுள்ள கூடுகளில் நீங்கள் தெரிவு செய்கின்ற விடையின் எண்ணை ஒத்த கூட்டினுள் (X) புள்ளடி இடுக.**

இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக அரச மற்றும் தனியார் வணிகங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, உடை போன்றவற்றை பூர்த்தி செய்ய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகள் பெறப்பட்டன. அரசுக்கும் இது தொடர்பாக பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.

01. மேற்படி சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேவை ஒன்றையும் அதற்கான விருப்பதையும் குறிப்பது.

(1) கல்வி – புத்தகம் (2) உணவு – சோறு
(3) சுகாதாரம் - வைத்தியர். (4) போக்குவரத்து – பஸ்வண்டி

02. பாதிக்கப்பட்ட வணிகங்களை மீள்கட்டி எழுப்புவதற்காக அரசால் வழங்கக்கூடிய சார்பான பங்களிப்பாக அமைவது

(1) வட்டியுடனான கடன் வழங்கல்
(2) வேறு வியாபாரங்களுக்கு அவர்களை மாற்றுதல்
(3) ஊழியர் சம்பளத்தை குறைக்க ஆலோசனை வழங்கல்
(4) குறைந்த வட்டி கடன் வழங்கல் மற்றும் ஆலோசனை வழங்கல்

03. மேற்படி நிகழ்வு தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் காரணியாக அமைவது

(1) பொருளாதார சூழல் (2) சட்டச்சூழல்
(3) தொழில்நுட்பச்சூழல் (4) சர்வதேசச்சூழல்

04. வணிகமொன்றின் பலம் மற்றும் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – தேவையான மூலதனம் C- அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம்
B – அரசினால் குறைந்த வட்டிக்கடன் வழங்கல் D – ஊழியர்களின் விசேட திறமையும் முயற்சியும்

இங்கு குறிப்பிட்டவற்றுள் பலம் மாத்திரம் உள்ளடக்குவது

(1) A யும் B (2) A யும் C (3) A யும் D (4) C யும் D

05. குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின்படி 25க்குக் குறைந்த ஊழியர்களை உள்ளடக்கியது
(1) தனியுடமை வியாபாரம் (2) சிற்றளவு வணிகம்
(3) பங்குடமை வியாபாரம் (4) சிறிய மற்றும் நடுத்தர வியாபாரம்

06. வணிகமொன்றை தெரிவு செய்யும் போது கருத்திற்கொள்ளும் காரணிகளாவன.
(1) நோக்கம், அளவு மற்றும் முகாமை யார் செய்வது என்பது
(2) சிறியளவு, பேரளவு மற்றும் முகாமை யார் செய்வது என்பது
(3) மூலதனம், அளவு மற்றும் உரிமை
(4) நோக்கம், பதிவு செய்தல் மற்றும் முகாமை

07. நாமல் தனது வியாபாரத்தை “Sanasuma” என பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இப்பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனம்
(1) பிரதேச சபை (2) பிரதேச செயலகம்
(3) நுகர்வோர் அதிகாரசபை (4) கம்பனி பதிவாளர் நாயகம்

08. வியாபார கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக ஆரம்பிக்க வேண்டிய கணக்கு
(1) சேமிப்புக் கணக்கு ஆகும் (2) நிலையான வைப்புக்கணக்கு ஆகும்
(3) நடைமுறைக்கணக்கு ஆகும் (4) வங்ககிக் கடன் கணக்கு ஆகும்

09. இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கை பேணும் தர்சன் தனது வியாபாரத்திற்கு ரூபா 50000 பெறுமதியான பொருட்களை நுவனிடம் கொள்வனவு செய்தார். இதற்காக தர்சன் காசோலை ஒன்றை நுவனுக்கு வழங்கினார். இக்காசோலையின் வரைவுநர் மற்றும் வரைவுனி என்பவற்றை ஒழுங்கு முறையில் இருப்பது
(1) இலங்கை வங்கி, நுவன் (2) நுவன், இலங்கை வங்கி
(3) இலங்கை வங்கி, தர்சன் (4) தர்சன், இலங்கை வங்கி

10. விக்ரம் தன்னிடமுள்ள 300 000 பெறுமதியான வாகனத்தை அதே பெறுமதிக்கு இலங்கை காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றார். இவ்வாகனம் விபத்தொன்றில் சிக்கி 500 000 பெறுமதியான இழப்பை சந்தித்தது. இவ்விழப்பிற்காக வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையாக அமைவது.
(1) ரூபா 500 000 (2) ரூபா 2 500 000 (3) ரூபா3 000 000 (4) ரூபா 3 500 000

11. தொடர்பாடல் செயன்முறையில் பல்வேறு பண்புகளைக் காணலாம். பின்னூட்டல் என்பதால் கருதப்படுவது
(1) தகவலை வழங்கும் நபர் அல்லது நிறுவனமாகும்
(2) தகவலை அனுப்புபவர் வழங்கும் தகவல் ஆகும்
(3) தகவல் அனுப்புவர் தகவல் தொடர்பாக நடந்து கொள்ளும் முறையாகும்
(4) தகவல் பெறுபவர் தகவல் தொடர்பாக நடந்து கொள்ளும் முறையாகும்

12. போக்குவரத்து என்பது பல்வேறு மூலங்களை உள்ளடக்கியதாகும். போக்குவரத்தின் மூலக்கூறுகளை சரியாக உள்ளடக்கும் கூற்று
(1) வழி, முறை, திறன், நிலையம்
(2) வழி, முறை, வேகம், கிடைப்பனவு
(3) வழி, முறை, தரிப்பிடம், சக்தி
(4) வழி, கிடைப்பனவு, திறன், பாதுகாப்பு

13. வணிகங்களில் சில்லறை வணிகமே கூடுதலாகக் காணப்படுகின்றது. சில்லறை வணிகம் தொடர்பான சார்பான கூற்றாக அமைவது

(1) சிறிய சிறிய அலகுகளாக விற்பனை செய்தல்
(2) இறுதி நுகர்வுக்காக விற்பனை செய்தல்
(3) மீள் விற்பனைக்காக விற்பனை செய்தல்
(4) குறிப்பிட்ட ஒரு பண்டம் அல்லது பல்வேறு பண்டங்களை விற்பனை செய்தல்

14. பின்வருவன முகாமைத்துவத்தின் செயற்பாடுகள் ஆகும்

A – செயற்படுத்தல் B – திட்டமிடுதல்
C – கட்டுப்படுத்தல் D – ஒழுங்குபடுத்தல்

மேற்படி நிகழ்வுகளின் சரியான ஒழுங்காக அமைவது

(1) C,D,B,A. (2) B,D,A,C. (3) D,B,C,A. (4) B,D,C,A.

15. தமல் தனது சேமிப்பு ரூ 50000 ஐ பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி ஒன்றில் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்தார். ஆறு மாதங்களின் பின் அவற்றை ரூ 55000 க்கு விற்பனை செய்தார். இதனால் அவர் பெற்றுக்கொண்டது.

(1) வட்டி வருமானமாகும் (2) விற்பனை இலாபம் ஆகும்
(3) இலாபம் ஆகும் (4) முதலீட்டு இலாபம் ஆகும்

16. கமல் தன்னிடமுள்ள மீதியிலிருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றார். அவர் செல்ல வேண்டிய இடம்

(1) முதன்மை வணிகர்களிடம் (2) இலங்கை மத்திய வங்கிக்கு
(3) எந்த வங்கிக்கும் (4) பொதுத்திறைசேரிக்கு

17. பின்வரும் பண்புகளை கருத்திற் கொள்க.

- கடந்த கால கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகும்
- வணிகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்
- எதிர்கால பொருளாதார நலன்களை கொண்டுவரும்

மேற்படி பண்புகளை காணக்கூடியது

(1) பொறுப்பில் ஆகும் (2) சொத்துக்களில் ஆகும்
(3) வருமானமாகும் (4) செலவினமாகும்

18 மற்றும் 19ம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

A.	உரிமையாளர் இட்ட மூலதனம்	ரூபா. 100 000
B.	வங்கிக்கடன் பெற்றது	ரூபா. 30 000
C.	உரிமையாளர் பற்று	ரூபா 5 000
D.	நிமலிடம் பொருள் கொள்வனவு	ரூபா 15 000

18. மேற்படி கொடுக்கல் வாங்கல்களால் கணக்கீட்டு சமன்பாட்டினை சரியாகக் காட்டும் கூற்று

	சொத்து	=	உரிமையாண்மை	+	பொறுப்பு
(1)	125 000	=	100 000	+	25 000
(2)	140 000	=	95 000	+	45 000
(3)	125 000	=	95 000	+	30 000
(4)	140 000	=	110 000	+	30 000

19. கொடுக்கல் வாங்கல் D க்கான சரியான இரட்டைப் பதிவு

(1) இருப்புக்கணக்கு வரவு ரூபா 15 000
காசுக்கணக்கு செலவு ரூபா 15 000

(2) இருப்புக்கணக்கு வரவு ரூபா 15 000
நிமல்கணக்கு செலவு ரூபா 15 000

(3) கொள்வனவுக்கணக்கு ரூபா 15 000
காசுக்கணக்கு செலவு ரூபா 15 000

(4) கொள்வனவுக்கணக்கு ரூபா 15 000
நிமல் கணக்கு செலவு ரூபா 15 000

20. அதிகரிப்பு வரவாகவும், குறைவு செலவாகவும் உள்ள இரட்டை விளைவு பாதிப்பு

(1) சொத்துக்கள் மற்றும் செலவாகும்
(2) சொத்துக்கள் மற்றும் வருமானமாகும்
(2) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாகும்
(4) சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மையாகும்

21. X நிரல் முதன்மை ஏடுகளையும் Y நிரல் மூல ஆவணங்களையும் கொண்டுள்ளது.

X நிரல்	Y நிரல்
1. காசேடு	A. இன்வொயிஸ்
2. வங்கிக்கணக்கு	B. பட்டியல்
3. விற்பனை நாளேடு	C. வங்கிக்கூற்று
4. பொதுநாட்குறிப்பேடு	D. பற்றுச்சீட்டு

முதன்மை ஏடுகளின் சரியான மூல ஆவணங்களை உள்ளடக்கிய சரியான ஒழுங்கு முறை

(1) D,C,B,A (2) D,B,C,A (3) D,A,B,C (4) D,C,A,B

22. கடன்பட்டோன் ஒருவரிடம் பெற்ற காசோலை ரூ 30 000 பெறுமதியானது வங்கியால் மறுக்கப்பட்டதற்கான சரியான இரட்டைப் பதிவு

(1) காசுக்கணக்கு வரவு ரூ.30 000
வங்கிக்கணக்கு செலவு ரூ. 30 000

(2) கடன்பட்டோன் கணக்கு வரவு ரூ.30 000
வங்கிக்கணக்கு செலவு ரூ. 30 000

(3) கடன்பட்டோன் கணக்கு வரவு ரூ.30 000
காசுக்கணக்கு செலவு ரூ.30 000

(4) வங்கிக்கணக்கு வரவு ரூ.30 000
காசுக்கணக்கு செலவு ரூ.30 000

23. அமின் வணிகத்தின் சில்லறை கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
சில்லறை காசு சுற்றோட்டம் ரூ 2000. ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் செலவுகள் மீள் நிரப்பப்படும். 2016 ஏப்ரல் 30ம் திகதி சில்லறை காசு மீதி ரூ 400 ஆகும். மே மாத்திற்கான தகவல்கள் வருமாறு.

மே 05	வாகனக்கூலி	100
	தபால் கட்டணம்	50
மே 15	போக்குவரத்து	200
	தாரகனுக்கு செலுத்தியது	300
மே 20	எழுதுகருவி	100
	உபசரிப்பு	200
மே 25	பிரதிபண்ணும் தாள்	200
	தபால் கட்டணம்	200

2016 ஜுன் 01இல் மீள் நிரப்ப வேண்டிய தொகை

(1) ரூ.650 (2) ரூ.1 350 (3) ரூ.1 600 (4) ரூ.2 000

24. நிமல் வியாபாரம் சில்லறை காசேட்டை பயன்படுத்துகின்றது.
பின்வருவன அவை தொடர்பானதாகும்

- 2015. 06.01 ல் மீதி ரூ. 500
- சில்லறை காசு சுற்றோட்டம் ரூ. 2 500

நிமல் வணிகத்தின் மே மாதத்திற்கான சில்லறை செலவுகள் யாது?.
(1) ரூ.1 500 (2) ரூ.2 000 (3) ரூ.2 100 (4) ரூ.2 500

25. அஜித் எனும் கடன் கொடுத்தோனுக்கு செலுத்த வேண்டிய 70 000 தொகையை உரிய காலத்திற்கு முன் செலுத்தி 10% கழிவு பெறப்பட்டது. இதற்கான சரியான இரட்டைப் பதிவு.

(1) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ.63 000
பெற்ற கழிவு கணக்கு வரவு ரூ. 7 000
காசு கணக்கு செலவு ரூ.70 000

(2) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு ரூ.70 000
காசு கணக்கு செலவு ரூ. 63 000
பெற்ற கழிவு கணக்கு செலவு ரூ. 7 000

(3) காசு கணக்கு வரவு ரூ.63 000
பெற்ற கழிவு கணக்கு வரவு ரூ. 7 000
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு ரூ.70 000

(4) காசு கணக்கு வரவு ரூ.77 000
பெற்ற கழிவு கணக்கு செலவு ரூ. 7 000
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு ரூ70 000

26. கொள்வனவு மற்றும் விற்பனை நாளேட்டில் சரியாக உள்ளடக்கும் நடவடிக்கை
(1) காசு விற்பனை 5000 மற்றும் பீற்றரிடம் கொள்வனவு 2000
(2) நிமலுக்கு விற்பனை 2000 மற்றும் காசுக்கொள்வனவு 3000
(3) வசந்தனிடம் கொள்வனவு 3000 மற்றும் அஸ்வினுக்கு விற்பனை 2000
(4) காசுக்கு கொள்வனவு 7000 மற்றும் விமலுக்கு விற்பனை 3000

27. “விலம்பல்” எனும் விபரம் எழுதப்படுவது
(1) கொள்வனவு நாளேடு (2) வங்கிக்கணக்கில்
(3) விற்பனை நாளேடு (4) பொது நாளேடு

28. 8500 கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம், தளபாடக்கணக்கு மற்றும் ஏனையவை கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவு
(1) தளபாடக்கணக்கு குறைவாகக் காட்டும்
(2) காசுக்கணக்கு கூட்டிக்காட்டும்
(3) கணக்குகளில் மாற்றம் ஏற்படாது
(4) தளபாட மற்றும் காசுக்கணக்கில் மீதி குறைவாகக் காட்டும்

29. “கைத்தொலைபேசி உடனடி காசு மாற்றத்திற்கு பயன்படும்” இவ்வசனம் குறிப்பது
(1) வங்கிக்கூற்றை மாதாந்தம் பெற முடியும்
(2) குறுந்தகவல் மூலம் விற்பனை தகவல்களை அறிய முடியும்
(3) விலைகோரலுக்கு இன்டநெட் பாவனையைப் பெறலாம்
(4) ஒருவரிடம் இருந்து பணம் பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம்

30. “புபுது” விளையாட்டுக்கழகத்தின் 2015.12.31இல் அங்கத்தவர்கள் 200 இருந்ததுடன் மாதாந்தம் 100 பேர் பங்களிப்புச் செய்கின்றனர். அங்கத்தவர்கள் 30 பேர் 2015 டிசெம்பர் மாதத்திற்கான தமது பங்களிப்பைச் செலுத்தவில்லை எனின் குறிப்பிட்ட வருடத்தில் பெறப்பட்ட அங்கத்தவர் தொகை

(1) ரூ.17 000 (2) ரூ.20 000 (3) ரூ.237 000 (4) ரூ.240 000

31. பின்வருவன உற்பத்தியுடன் தொடர்பானதாகும்

- நேர் மூலப்பொருள் கிரயம் ரூ.100 000
- நேரில் மூலப்பொருள் கிரயம் ரூ. 20 000
- நேரில் ஏனைய கிரயம் ரூ. 15 000
- நேர்கூலி ரூ. 30 000
- நிர்வாக செலவு ரூ. 25 000

இங்கு முதன்மைக் கிரயமாக அமைவது

(1) ரூ.120 000 (2) ரூ.130 000 (3) ரூ.150 000 (4) ரூ.190 000

32. நிறுவனமொன்றின் செயற்பாட்டு நிலைமை அறிவதற்காக A கணக்கும், குறிப்பிட்ட ஓர் தினத்தில் நிதி நிலைமையை அறிய B கணக்கும் தயாரிக்கப்படும். இங்கு A மற்றும் B ஆக குறிப்பிடுவது

(1) வியாபாரக் கணக்கும் பரீட்சை மீதியுமாகும்
(2) இலாபநட்டக்கணக்கும், நிதிநிலைமைக்கூற்றும்
(3) இலாபநட்டக்கணக்கும் பரீட்சை மீதியும்
(4) வியாபாரக்கணக்கும் பரீட்சை மீதியும்

33. அகமட் வியாபாரத்தின் தகவல்கள் வருமாறு

2015/04/01 இல் இருப்பு ரூ. 4 500
வருடத்தின் கொள்வனவு ரூ. 54 300
கொண்டு செல்லல் கூலி ரூ. 1 700
எற்றும் கூலி ரூ. 9 000
2016/3/31 இல் இருப்பு ரூ. 2 500

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் மற்றும் விற்பனைக்கு தயாராக இருந்த பொருட்களின் கிரயம்

(1) ரூ.65 000 மற்றும் ரூ.67 000 (2) ரூ.54 300 மற்றும் ரூ.65 300
(3) ரூ.63 300 மற்றும் ரூ.67 800 (4) ரூ.69 500 மற்றும் ரூ.67 000

34. கீழ் வருவனவற்றில் சரியான செலவுப் பகுப்பாய்வாக அமைவது

	விநியோக செலவு	நிர்வாகசெலவு	நிதிச்செலவு	ஏனைய செலவு
1	விற்பனை ஊழியர் சம்பளம	நிதிக்கிரயம்	வட்டி	கொடுத்த கழிவு
2	போக்குவரத்து	காப்புறுதி	விற்பனைத் தரவு	தீயழிவு
3	விளம்பரம்	வாடகை	வங்கிக்கடன	வங்கிக்கட்டணம்
4	கொடுத்த கழிவு	கட்டிட வாடகை	அ.மு.கடன	மோ.வாகன தேய்வு

35. இயந்திரம் ஒன்றின் கொள்விலை ரூ 580 000
கொண்டுவரல் மற்றும் பொருத்தும் செலவு ரூ.120 000
திருத்தச் செலவு ரூ.10 000
பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்கள்
இழிவுப்பெறுமதி ரூ.50 000

நேர்கோட்டு முறையும் வருடாந்தத் தேய்வும்

(1) ரூ.53 000 (2) ரூ.65 000 (3) ரூ.70 000 (4) ரூ.71 000

பின்வருவனவற்றைப் பயன்படுத்தி 36 – 40 வரை கேள்விக்கு விடை தருக.

உதயன் வியாபாரத்தின் 2015.12.31இல் பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு	தொகை
மூலதனம்		150 000
2015.01.01 இல் இருப்பு	10 000	
கொள்வனவு	350 000	
கடன்பட்டோர்	100 000	
2015.01.01இல் தேய்வு ஏற்பாடு		
- மோட்டார் வாகனம்		75 000
கடன்கொடுத்தோர்		160 000
மோட்டார் வாகனம்	750 000	
விற்பனை		870 000
10% வங்கிக்கடன்		200 000
சம்பளம்	80 000	
மின்சாரம்	20 000	
காப்புறுதி	30 000	
வட்டி	10 000	
பெற்ற வாடகை		60 000
தளபாடம்	90 000	
காசு மீதி	35 000	
வங்கி மீதி	40 000	
	1515 000	1515 000

மேலதிக தகவல்கள்

1. 2015.12.31இல் இருப்பு ரூ 15 000
2. மோட்டார் வாகனம் 10% கிரயத்தில் தேய்வு இடப்படும்
3. உரிமையாளர் பற்று காசாக 15 000

36. இவ்வணிகத்தின் 2015.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபநட்டக்கணக்கில் காட்டப்படும் நிர்வாக செலவின் தொகை
(1) ரூ.130 000 (2) ரூ.175 000 (3) ரூ.185 000 (4) ரூ.205 000

37. இவ்வணிகத்தின் நடைமுறை பொறுப்பாக அமைவது
(1) ரூ.160 000 (2) ரூ.170 000 (3) ரூ.360 000 (4) ரூ.370 000

38. இவ்வணிகத்தின் 2015.12.31 வருடத்திற்கான மொத்த இலாபமாக அமைவது
(1) ரூ.525 000 (2) ரூ.530 000 (3) ரூ.540 000 (4) ரூ.770 000

39. வணிகத்தின் 2015.12.31 வருடத்திற்கான தேறிய இலாபமாக அமைவது
(1) ரூ.285 000 (2) ரூ.290 000 (3) ரூ.300 000 (4) ரூ.360 000

40. வணிகத்தின் 2015.12.31 மொத்த சொத்தாக அமைவது
(1) ரூ.150 000 (2) ரூ.495 000 (3) ரூ.505 000 (4) ரூ.510 000

முழுப்பதிப்புரிமை உடையது.

2016 க.பொ.த. (சாதாரணதரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்குத் தொடர்

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

முன்னோடி வினாப்பத்திரம்

பகுதி II

கவனிக்க வேண்டியவை :-

***. ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

***. முதலாம் வினா உட்பட பகுதி ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் இரண்டு வினாக்குளுக்கும் விடை தருக**

01. கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் i தொடக்கம் x வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

" குணசிறி" ஹோட்டல் பாடநெறியில் உணவு மற்றும் குடிபானங்கள் உற்பத்தி செய்வது தொடர்பாக பாரிய கற்றளை மேற்கொண்ட பின்பு சுற்றுலா ஹோட்டலில் மூன்று வருடம் சேவை செய்துள்ளார். நகரில் புதிதாக புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்துக்கு அருகாமையில் உணவுச்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளார்.

அவர் தனது ரூபா 500,000 பெறுமதியுடைய கட்டடிடம் மற்றும் ரூபா 300,000 ரூபா பணத்தையும் கொண்டு 2015.01.01 இல் "ரசசிரி ஹோட்டல்" என்ற பெயரில் உணவச் சாலையை ஆரம்பித்துள்ளார்.

ஜனவரி 02 ஆம் திகதி வணிகத்திற்காக ரூபா 200 ,000 இலங்கை வங்கியில் கடன் பெற்றுக் கொண்டதுடன் சக்தி தளபாட விற்பனை நிலையத்தில் ரூபா 100,000 பெறுமதியுடைய தளபாடம் கடனுக்கு கொள்வனவு செய்ததுடன் ரூபா 500,000 பெறுமதியான உணவு தயாரிப்பதற்கானதும் பரிமாற்றங்களுக்குமான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜனவரி மாதத்தில் ரூபா 70 000. செலுத்தி உணவு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்ததுடன் குறித்த மாதத்தில் உணவு மற்றும் குடிபானங்கள் விற்பனை செய்தலின் மூலம் ரூபா 200 000. விற்பனை வருமானம் பெற்றுக் கொண்டுள்ளார். கொள்வணவு செய்த அனைத்து உணவுப் மூலப் பொருட்களும் அம்மாதத்தில் நிறைவடைந்தன.

ரூபா 10000 சம்பளமாகவும், ரூபா 500 தண்ணீர் கட்டணமாகவும், ரூபா 1500 போக்குவரத்துச் செலவாகவும் செலுத்தப்பட்டதுடன். வணிக நடவடிக்கையை இலகுபடுத்துவதற்காக வணிக வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை அரம்பிக்க தீர்மானித்தார் ,ஜனவரி 31 வரை ரூபா 3000 மின்சாரக் கட்டணம் இன்னும் செலுத்தப்பட்டீருக்கவில்லை

i) (அ) "ரசசிறி ஹோட்டலில்" உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளுக்கமைய குறித்த வணிகம் எந்த வகையினைச் சேர்ந்தது எனக் குறிப்பிடுக?

(ஆ) குறித்த வணிகத்தின் காணப்படுகின்ற பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

ii) (அ) இவ் வணிகம் உள்ளடங்குகின்ற வணிக அமைப்பு யாது?

(ஆ) இவ்வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் குறிப்பிடுக.

iii) (அ) நோக்கங்களின் அடிப்படையில் வணிகத்தினை வேறுபடுத்தும் போது இவ்வணிகமானது எந்த வகையைச் சார்ந்தது?

(ஆ) இவ்வணிகத்தில் காணப்படக்கூடிய முகாமைத்துவ செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு நடவடிக்கையின் கீழ்வரும் ஒரு நடவடிக்கையினைக் குறிப்பிடுக.

iv) (அ) இவ் வணிகம் வங்கி நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்கபட வேண்டியது எவ் வங்கியிலாகும் ?

(ஆ) வங்கியில் நடைமுறைக் கணக்கினை பாராமரிப்பதன் மூலம் வணிகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் 02 ஐ எழுதுக.

v) 2015.01.01 அன்று உள்ளவாறான அடிப்படைக் கணக்கீட்டு சமன்பாட்டினைக் குறித்துக் காட்டுக

vi) அவ்வணிகத்தினை ஆரம்பிக்கும் போதுள்ள ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் எவ்வளவு ?

vii) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு மூல ஆவணங்கள் இரண்டும் மூல பதிவேடுகள் 02 ஐ எழுதுக.

viii) ரூபா 3000 செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய நாட்குறிப்புப் பதிவைத் தருக.

ix) (அ) அவ் வணிகத்தில் 2015.01.31 திகதிக்கு நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படக் கூடிய நடைமுறையல்லாப் பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

(ஆ) அவ்வணிகத்தில் நடைபெற்றுள்ள சொத்து அதிகரிப்பு,பொறுப்பு அதிகரிப்பு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.

ஓ) இவ்வணிகத்தில் 2015.01.31 திகதி முடிவடைந்த மாதத்தில் செயற்பாட்டு இலாபம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடுக.

(புள்ளி 2 x 10 = புள்ளி 20)

பகுதி I – வணிகக்கல்வி

- (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக)

02.

(i) (அ) வணிகம் என்பதனால் கருதப்படுவது என்ன? (புள்ளி 01)

(ஆ) இலாபநோக்கம் உடைய நிறுவனங்களில் பொதுவாகக் காணப்படக்கூடிய 2 வர்த்தக நோக்கங்களை குறிப்பிடுக. (புள்ளி 01)

(ii) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானவையா பொய்யானவையா எனக் குறிப்பிடுக.

(அ)தேவைகளை நிறைவேற்றும் வெவ்வேறு வடிவங்கள் விருப்பம் எனப்படும்

(ஆ) உணவு, உடை, கல்வி ஆகியன மட்டுமே மனிதனின் அடிப்படை தேவைகள்

(இ) உற்பத்திக்காரணிகள் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை என வகைப்படும்.

(ஈ) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினை அமைத்ததன் நோக்கமானது அசாதாரண வணிக செயற்பாடுகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதாகும். (புள்ளி 02)

(iii) காந்தி என்பவர் ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை தைத்தல் பாடநெறியினை பூரணமாகப் பூர்த்தி செய்ததன் பின்பு தன்னுடைய மனைவியின் துணையுடன் 10 தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்து தனது வீட்டின் ஒரு பகுதியில் ஆடை தைக்கும் வணிகத்தினை ஆரம்பித்தார்.

(அ) காந்தியினுடைய வணிகத்தில் அக்கறை காட்டும் இரு தரப்பினர்களை குறிப்பிடுக?

(ஆ) குறித்த வணிகத்தில் அக்கறையுடையவர்கள் ஆர்வம் காட்டுவதற்கான காரணங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக? (புள்ளி 02)

(iv) பியல் என்பவர் பிரபலமான பாடசாலைக்கு அருகில் பாடசாலை எழுதுகருவிகள் மற்றும் காகிதாதிகளை விற்பனை செய்யும் வணிகத்தினை நடாத்தி வருகின்றார். அண்மையில் அவருடைய வணிக நிறுவனத்திற்கு அருகில் மேலும் ஒரு புத்தகங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பியல் வணிகத்தின்,

(அ) வாய்ப்புக்கள் மற்றும்

(ஆ) அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுக. (புள்ளி 02)

(முழுப்புள்ளிகள் 08)

03. (i) (அ) காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்களின் போது காசோலை வரைவோன் என்ற பதத்தினை தெளிவுபடுத்துக? (புள்ளி 01)

(ஆ) காசோலையினை வரையும்போது கருத்தில் கொள்ளவேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.:. (புள்ளி 01)

(ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களைச் சரியாயின் சரி (√) எனவும் பிழையாயின் பிழை எனவும் (X) எனவும் குறிப்பிடுக.

(அ) தனியுடமை வியாபாரத்தினை பதிவு செய்வதன் மூலம் நிறுவனத்திற்கு தனி ஆளுமையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஆ) காப்புறுதியில் காப்புறுதியினை வழங்குவோர் காப்புறுதி அளிப்போன் எனப்படுவர்.

(இ) உள்ளகத் தொடர்பாடலில் தகவல் அனுப்புவோருக்கும் தகவல் பெறுவோருக்கும் இடையில் இடைவெளி குறைவாகக் காணப்படும்.

(ஈ) பிரபலமான அலங்கார நிறுவனத்திற்கு மணமகளை அலங்காரம் செய்வதற்கு விசேடமானவகை பூக்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு சிறப்பான போக்குவரத்து சாதனம் விமானம் மூலமாகும்.

(புள்ளி 02)

(iii) வெளிநாட்டில் இருந்து வருகைதந்த மூன்று நண்பர்கள் ஒன்றிணைந்து நவீன தொழில்நுட்ப முறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மோட்டார் கார்களுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் சேவை வழங்கும் வணிகத்தினை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதுடன் மேற்குறித்த மூன்று நண்பர்களும் மிகவும் செயற்றிறன் வாய்ந்த கணக்கீட்டு முறையினை கையாள்வதற்கும் யோசித்துள்ளார்கள். அதேபோல் குறித்த வணிகத்தினை சட்டரீதியான விதிமுறைகளின் அடிப்படையில் ஆரம்பிப்பது சிறப்பானது என்றும் எண்ணுகின்றார்கள்.

(அ) மேற்குறித்த மூன்று நண்பர்களுக்கு நீங்கள் சிபார்சு செய்யும் சிறந்த வணிக அமைப்பினைக் குறிப்பிடுக?

(புள்ளி 01)

(ஆ) மேற்குறித்த **அ** பகுதியில் குறிப்பிட்ட வணிக அமைப்பில் காணப்படும் சாதகமான ஒரு விடயத்தினையும் பாதகமான ஒரு விடயத்தினையும் குறிப்பிடுக. (புள்ளி 01)

(iv) மின்உபகரணங்கள் விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள சனத் என்பவர் தனது விற்பனை நிலையத்திற்கு தீ விபத்துக் காப்புறுதியினை பெற்றுக் கொண்டார். எதிர்பாராத விதமான மின்சார ஒழுங்கினால் கட்டடங்களில் ஒரு பகுதியும் மின்உபகரணங்களில் பெரும் பகுதியும் தீயினால் பாதிப்படைந்துள்ளது அதை மேற்குறித்த விடயம் பற்றி தொலைபேசி மூலம் காப்புறுதி நிறுவனங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளதுடன் காப்புறுதி நிறுவனம் வருகை தருவதாக தெரிவித்துள்ளது. சனத்துடைய தீ விபத்துக் காப்புறுதிகள் ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 3 000 000.00 என்பதுடன் ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 2 000 00.00 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ) அவருக்கு கிடைக்கும் காப்புறுதி நட்டஈடு போதாக் குறையாக உள்ளதா ? அதற்கு தாக்கம் செலுத்தும் காப்புறுதித் தத்துவம் என்ன எனக் குறிப்பிடுக ? (புள்ளி 01)

(ஆ) மேற்குறித்த சம்பவம் தொடர்பாக தொடர்பாடல் நடைமுறையில் கலிப்பு அட்டவணை முறையினைக் காட்டுக. (புள்ளி 01)

04. (i) (அ) முகாமைத்துவ நடைமுறையின் கீழ் உள்ளடக்கப்பட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (புள்ளி 01)

(ஆ) "சந்தைப்படுத்தல்" பற்றி சுருக்கமாக விளக்குக. (புள்ளி 01)

(ii) கீழுள்ள வாக்கியங்கள் உண்மையானவை , பொய்யானவை என குறிப்பிடுக.

(அ) கொள்வனவாளரும் , விற்பனையாளரும் சந்திக்கும் அல்லது தொடர்பு கொள்ளும் ஏதாவது முறை சந்தை எனப்படும்.

(ஆ) "விற்பனைக் கலவையானது" 5 பகுதிகளைக் கொண்டதும் அதை 5 PS என அழைக்கப்படும்.

(இ) மனிதர்களின் ஆசைகளையும் , தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக சந்தையில் முன்வைக்கப்படும் எந்தப் பொருட்களும் உற்பத்தி எனப்படும்.

(ஈ) திறைசேறி உண்டியலில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு பூரண அரச உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. (புள்ளி 02)

(iii) "பியல" என்பவர் வாங்கிய அபிவிருத்தி லொத்தர் சீட்டு மூலமாக ரூபா 50 000 பரீசினைப் பெற்றுள்ளார். அவர் குறித்த பரீசினை மிகவும் பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளார்.

(அ) முதலீட்டு மார்க்கத்தில் மேற்கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. (புள்ளி 01)

(ஆ) பியலுக்கு மேற்குறித்த நிதியினை பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய இரண்டு முதலீடுகளைக் குறிப்பிடுக. (புள்ளி 01)

(iv) சபுமல் என்பவர் சுயதொழிலாளர் சீமெந்து கற்களை உற்பத்தி செய்தும் வணிகத்தை சடாத்தி வருகின்றார். இங்கு தன்னுடைய சீமெந்து கல் உற்பத்திகளை தானே வினியோகமும் செய்து வருகின்றார்

(அ) சபுமல்லினால் உற்பத்தி செய்யப்படுகின்ற சீமெந்து கல்லானது எந்தச் சந்தைக் கலவை காரணிகளின் கீழ் வருகின்றது? (புள்ளி 01)

(ஆ) சீமெந்துகல் அவரினாலேயே வினியோகமும் செய்யப்படுமாயின் குறித்த வினியோக செயல்முறைகளை பெயரிடுக. (புள்ளி 01)

பகுதி II – கணக்கீடு

- (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்)

05. (i) (அ) கணக்கீடு என்ற பதத்தினை தெளிவுபடுத்தக?

(ஆ) பொறுப்புக்களில் காணக்கூடிய பண்புகள் இரண்டினை எழுதுக? (புள்ளி. 02)

(ii) லங்கா வணிகத்தின் 2016ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(1) 2016-07-01 ரூபா 500 000 மூலதனமாக வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

(2) 2016-07-04 ரூபா50000இற்கு கடனுக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(3) 2016-07-08 காசுக்கு விற்பனை ரூபா 30 000

(4) 2016-07-10 மின்சாரப் பட்டியல் செலுத்தியது ரூபா 3 000

(5) 2016-07-13 உரிமையாளர் ரூபா 4 000 இனை தனது சொந்த தேவைக்காக எடுத்துள்ளார்.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவினை கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை மூலமாக விபரிக்குக. முதலாவது நடவடிக்கைக்குரிய விளைவு காட்டப்பட்டுள்ளது.

கொடுக்கல் வாங்கல் இல.	சொத்துககள் =	மூலதனம் +	பொறுப்புக்கள்
(1)	+ 500 000 (காசு)	+ 500 000	

(புள்ளி. 02)

(iii)திமுது இனுடைய வியாபாரத்தின் 2016 ஜீன் மாத்திற்குரிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

திகதி	பற்றுச்சீட்டு இல.	கடன்பட்டோர்	பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேறிய பெறுமதி
2016/06/02	610	குசல்	13 500
2016/06/07	611	விசல்	8 200
2016/06/18	612	நயோமி	5 300
2016/06/26	613	மியூறி	9 250

தேவைப்படுபவை,

(அ) விற்பனை நாளேட்டினை தயாரிக்குக.

(ஆ) நாளேட்டிற்கு உரிய பேரேடுகளை காட்டுக. (புள்ளி. 04)

(iv) வில்சான் வியாபாரத்தின் 2016 ஜுன் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(1) 2016/06/01 ஆம் திகதியன்று வங்கி கணக்கு மீதி ரூபா 150 000

(2) 2016/06/03 கொள்வனவு காசோலை மூலமாக ரூபா 20000

(3) 2016/06/05 கடன் கொடுத்தோரான சரத்துக்கு காசோலை மூலமாக செலுத்தியது ரூபா 8,000.00

(4) 2016/06/08 வங்கியில் வைப்பிட்ட தொகை ரூபா 40 000

(5) 2016/06/12 காசோலை மூலம் செலுத்தப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூபா 6 000

(6) 2016/06/14 விற்பனை காசோலைக்கு ரூபா 30 000

(7) 2016/06/16 கடன்பட்டோரான விபுல இடமிருந்து பெற்ற காசோலை ரூபா 15 000

(8) 2016/06/18 சம்பளம் காசோலை மூலம் செலுத்தியது ரூபா 12 000

(9) 2016/06/20 பெற்றுக்கொள்ளப்பட்ட காசோலைகள் அனைத்தும் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

(10) 2016/06/23 கடன்கொடுத்தோரான சரத்துக்கு காசோலை மூலமாக செலுத்தப்பட்ட தொகை வங்கியால் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

(11) 2016/06/26 காசு விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 30000 வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

(12) 2016/06/29காசோலை மூலம் செலுத்தப்பட்ட தொலைபேசிக்கட்டணம் ரூபா 6 000

வேண்டப்படுபவை,

(அ) வங்கிக்கணக்கினைத் தயாரித்தலும் 2016/06/30ஆந் திகதியன்று வங்கி கணக்கு மீதியினையும் காட்டுதலும் (புள்ளி .04)

(முழுப்புள்ளிகள் 12)

06.(i) (அ) கணணி மயப்படுத்தப்பட்ட அறிக்கையேடு (Spread Sheet) மூலமாக கிரய தாளினை (Cost Sheet) தயாரிப்பதற்கான அடிப்படைப் படிமுறைகளை எழுதுக.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று எந்த நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகின்றது?

(புள்ளி 02)

(ii) மகாவலி ஓடு உற்பத்தியாளரின் 2016 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஓடு உற்பத்திக்காக செலவிடப்பட்ட முழுத்தொகை ரூபா 180 000ஆகும். ஓடுகள் 12 000 உற்பத்தி செய்யப்பட்டன. ஒரு ஓட்டினுடைய விற்பனை விலையானது உற்பத்தி கிரயத்துடன் 10% இலாபம் சேர்த்து தீர்மானிக்கப்படுகிறது.

கீழ்வருவனவற்றனை தயாரிக்குக

(i) ஒரு ஓட்டுக்கான உற்பத்திகிரயம்.

(ii) 10 000 ஓடுகள் விற்பனை செய்யப்படின் முழு விற்பனை வருமானம். (புள்ளி 02)

iii) 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பியரத்னா இன்னுடைய வங்கி கணக்கு மீதி ரூபா 103 000 ஆகும். அன்றைய தினம் வங்கி கூற்று மீதி ரூபா 101 000 ஆகும். வேறுபாட்டுக்கான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) நிலையான கட்டளையின் பெயரில் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா 8 000

(ii) வைப்பிலிடப்பட்டதும் வங்கியினால் வசூலிக்கப்படாததுமான காசோலை ரூபா 15 000

(iii) வழங்கப்பட்ட ஆனால் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 9 000

(iv) கடன்படுனரால் நேரடியாக வைப்பிலிடப்பட்ட தொகை ரூபா 12 000

வேண்டப்படுபவை,

(அ) வங்கிக்கணக்கினை சீர்செய்தல்

(ஆ) மேற்குறித்த சீராக்கப்பட்ட வங்கி மீதி வங்கிக் கூற்று வங்கி மீதியுடன் வேறுபடுமாயின், அவ் வேறுபாட்டுக்கான காரணிகளை குறிப்பிடுக. (புள்ளி 04)

(iv) 2016.03.31 அன்று றவிந்து நமுனுகுல வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் செலவுப் பக்க கூட்டுத் தொகையானது வரவினை விட ரூபா 5 200 ஆல் கூடுதலாகக் காணப்பட்டது. கீழ்வரும் தவறுகள் இனங்காணப்பட்டுள்ளன.

(i) ரூபா 4 000 க்கான கொள்வனவு பட்டியல் ஒன்று நாளேடுகளில் பதியப்படாது இருந்தது.

(ii) விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகையானது ரூபா 4 000 ஆல் கூடுதலாகக் கூட்டப்பட்டிருந்தது.

(iii) செலுத்தப்பட்ட போக்குவரத்துக் கட்டணம் குறித்த கணக்கில் ரூபா 1 200 இனால் குறைவாக பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுபவை

(i) மேற்குறித்த தவறுகளை திருத்துவதற்கான பேரேட்டுப் பதிவுகள்.

(ii) தொங்கல் கணக்கு. (புள்ளி 04)

07. (i) (அ) நிதி நிலைமைகளைக் காட்டும் கூற்றில் உள்ள நடைமுறையல்லா சொத்துக்களில் கீழ் காணப்படும் 2 சொத்துக்களைக் குறிப்பிடுக. (புள்ளி 01)

(ஆ) இலாபநோக்கமற்ற நிறுவனங்களினால் தயாரிக்கப்படுகின்ற கொள்ளல் கொடுத்தல் கணக்குகளில் காணப்படும் 2 பிரதான இயல்புகளை குறிப்பிடுக. (புள்ளி 01)

(ii) மினுங்கும் நச்சத்திரம் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 ஆக உள்ளதுடன் ஒரு அங்கத்தவரிடம் மாதாந்தம் ரூபா 600 அங்கத்துவ கட்டணமாக அறவிடப்படுகின்றது. 2016/03/31 குறித்த நிறுவனத்தினுடைய கொள்ளல் கொடுத்தல் கணக்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

2016/03/01 மீதி	12 000	பணியாளர்கள் சம்பளம்	20 000
பெறப்பட்ட அங்கத்துவ கட்டணம்	55 000	விளையாட்டு மைதான பராமரிப்பு செலவு	10 000
போட்டிகளுக்காக விற்கப்பட்ட அனுமதிப்பத்திர மூலமாகப் பெறப்பட்ட வருமானம்	30 000	போட்டிகள் ஒழுங்குபடுத்தும் செலவு	40 000
பெற்ற நன்கொடைகள்	10 000	நீர், மின்சாரம், சிற்றூண்டி செலவுகள்	30 000
		2016/03/31 மீதி/கீ/கொ/செ.	7 000
	107 000		107 000
மீதி/கீ/கொ/வ.	7 000		

2016/03/31 அன்று செலுத்த வேண்டிய தொழிலாளர் சம்பளம் ரூபா 8 000

வேண்டப்படுபவை

மேற்தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 2016/03/31இல் இறுதி மாத்திற்கான வருமானக் கூற்றினை தயாரிக்குக. (புள்ளி 02)

(iii) சுபுண் வணிக நிறுவனத்தின் 2015-12-31ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	வரவு	செலவு
கடன்கொடுத்தோர்		400 000
கொள்வனவுகள்	521 000	
இருப்பு 2015.01.01 அன்று உள்ளவாறு	65 000	
காணி	600 000	
கட்டடங்கள் (கிரயத்தில்)	500 000	
அலுவலக உபகரணங்கள் (கிரயத்தில்)	400 000	
விற்பனைகள்		960 000
கடன்பட்டோர்	283 000	
10% வங்கிக்கடன்		200 000
மின்சாரம்	16 000	
ஊழியர் சம்பளம்	55 000	
அலுவலக செலவுகள்	30 000	
2015/01/01 அன்று பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்		80 000
உள்வந்த வண்டிக்கூலி	14 000	
முதலீடுகள்		875 000
காசு	19 000	
வங்கி மேலதிகப்பற்று		70 000
பெற்ற தரகு		15 000
கொடுத்த தரகு	12 000	
செலுத்திய வங்கிக்கடன் வட்டி	5 000	
கெட்ட கடன் ∴ அறவிடமுடியாக் கடன்	10 000	
பற்றுக்கள்	20 000	
கட்டிடக் கூலி	50 000	
	2 600 000	2 600 000

மேலதிக தரவுகள்

01. 2015/12/31 அன்று நிறுவனத்தில் உள்ளவாறான இருப்பு ரூபா. 80 000 0

02. அலுவலக உபகரணங்களுக்கு ஆண்டுக்கு 10% பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்க.

03. வங்கியில் 2015/07/01ஆம் திகதியன்று கடன் பெறப்பட்டது.

04. 2015/12/31 அன்று செலுத்த வேண்டிய மின்சாரம் ரூபா.4 000

வேண்டப்படுபவை

1. 2015/12/31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கூற்று (புள்ளி 04)
2. 2015/12/31 ஆந் திகதிக்குரிய நிதி நிலமைகளை காட்டும் கூற்று (புள்ளி 04)